**செய்தி வெளியீடு எண்:047** **நாள்:13.05.2021**

# <u>செய்தி வெளியீடு</u>

கடலூர் மாவட்டத்தில், சிப்காட் வளாகத்தில் இயங்கி வரும் கிரிம்சன் நிறுவனத்தில் 13–5–2021 அன்று அமோனியா பாய்லர் வெடித்ததில் அமோனியா வாயு வெளிவந்து, அங்கு பணியில் ஈடுபட்டிருந்த கடலூர் மாவட்டம், பழைய வண்டிப்பாளையத்தைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் என்பவரின் மகன் திரு. ராஜ்குமார், செம்மங்குப்பம் பகுதியைச் சேர்ந்த திரு. கருணாகரன் என்பவரின் மகன் திரு. கணபதி, காரைக்காடு பகுதியைச் சேர்ந்த திரு. செந்தில்குமார் என்பவரின் மனைவி திருமதி சவித்தா, புவனகிரி பகுதியைச் சேர்ந்த திரு.விசேஸ்ராஜ் ஆகியோர் உயிரிழந்துள்ளனர். மேலும் இச்சம்பவத்தில் 10 பேர் காயமடைந்து, கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இத்துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், காயம் அடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**